மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) புள்ளிவிவர இன்ஸ்பெக்டர் பதவிக்கு 1972 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் தமிழ் நாடு அரசு அலுவலர் தேர்வு ஆணைக்குழு நேர்முகத் தேர்வு எதுவும் நடத்தவில்லை.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister Whether eleven Statistical Inspectors from among the Travancore-Cochin transferrd personnel have been recently reverted and if so, may I know the reasons therefor for their reversion?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரம் அளிக்கப்படும்.

Allotment of mechanised boats

* 9 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) the number of persons who have not been allotted mechanised fishing—boats in Kanyakumari district although they have paid the necessary deposits for the same; and

(b) when mechanised boats will be allotted to them?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) 274.

(இ)சீட்டுக் குலுக்கித் தெரிந்தெடுக்கும் முறை மூலமாக மீனவத் தொகுதியினருக்கு படகுகள் ஒதுக்கப்படுகின்றன. மேற் சொன்ன நடைமுறைக்கு இணங்க, இனிவரும் ஆண்டுகளில், மேற்சொன்ன 274 விண்ணப்பதாரர்களுக்கும் படகுகள் ஒதுக்கப் படும்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: சார், சீட்டு குலுக்கும் முறைப்படி படகுகள் ஒதுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதனால் 2—3 ஆண்டுகளுக்கு முன்பு மனு செய்தவர்களுக்குக் கூட படகு கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. அதை மாற்றி, அவர்கள் விண்ணப்பித்த தேதியை கணக்கில் எடுத்துக் கொண்டு சீனியாரிட்டி பேசிஸில் படகுகள் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏற்கனவே அந்த முறை இருந்தது. சரியாக அமல்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும், மீனவச் சமுதாய மக்கள் பெருங்குறை தெரிவித்ததாலும், இந்தப் புதிய முறையை அரசு இப்போது கையாண்டு வருகிறது.

Drought relief measures.

* 10 *Q.*—Thiru K. T. K. THANGAMANI :
Thiru N. KITTAPPA :
Thiru D. S. A. SIVIPRAKASAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Revenue Board Members who toured the districts during August-September 1972 to study the drought conditions, have submitted their reports to the Government ; and

(*b*) if so, the relief given to the various areas, so affected ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பாதகமான பருவ நிலையினால் பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் ஏற்கனவே உள்ள பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த உடனடி நிவாரண நடவடிக்கையாக ரூபாய் 25 லட்சம் செலவிட வருவாய்த்துறையின் 10—9—1972 நாளிட்ட 2415-ஆம் எண் ஆணையின் வாயிலாக அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேலும், இப்பகுதிகளில் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன்கள், நிலவரி, வேளாண்மை வருமான வரி வசூலிப்பதை 31—12—1972 வரை தள்ளிவைக்கும்படியும் அரசு ஆணையிட்டது.

பின்னர், 29—9—1972-ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பாதகமான பருவ நிலைகளினால் பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக கூடுதலாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு வருவாய்த்துறையின் 5—10—1972-ஆம் நாளிட்ட 2626-ஆம் எண் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. கே. டி. கே தங்கமணி : சார், ரெவின்யூ போர்டு மெம்பர்கள் தங்களுடைய பரிந்துரையில் கோவில்பட்டி, மற்றும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்து தனியாக ஆலோசனை கொடுத்து இருக்கிறார்களே, அந்த ஆலோசனை முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டு விட்டதா, அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?